முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1388

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.07.2023, செவ்வாய்கிழமை

1. ஞானத்தலைவன் என் சக்தியாக
   ஞான அவதாரம் கொண்ட அரங்கனே
   தானதர்மத்தை எங்கும் நிரப்பி
   தயவாக வடிவான குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 02 ம் நாள், 18.07.2023, செவ்வாய்கிழமை)
   வரங்களாக என்சக்தி உன்னுள்ளே
   வையகத்தில் நாளும் நாளும் பெருகிவர
3. அரங்கன் உன் திருவடி பற்றி
   அகிலத்தார் வந்து சேரசேர
   சேரவே உலகமெல்லாம் ஞானிகள் படை
   சிறப்பான ஞானவான் படைகளாக
4. மாறவே எங்கும் தர்மபலம்
   மக்களை காக்கும் மகா சக்தியாக
   ஆகவே உருவெடுத்து கலியுகத்தில்
   அரங்கன் நீ வந்த நோக்கம் நிறைவேறும்
5. மாறுதலாக எங்கும் சன்மார்க்க நெறி
   மக்களை ஆட்கொண்டு இனிதே உயிர்கொலை விலகி எங்கும்
   எங்குமே தர்மஞான சபையாகி
   எல்லோரும் தர்மஞான வழிவந்து
6. ஓங்காரம் பாட இந்த கலியுகத்தில்
   உயர்வான ஞான ஆட்சிக்காலமாக
   ஓங்காரக்குடிலாசான் உந்தன் சேவையாலே
   உயர்வான மாற்றம் சடுதி காணும்

7. காணவே அரங்கனுள் யானிருந்து கலியுகத்தை கவனித்து வருகின்றேன்
ஞானமாக உன்னை தேடிவரும் மக்கள் கூட்டம் மூலமே
ஞாலமதில் எங்கும் ஞான ஆட்சிப்படைத்து
ஞானலோகமாக இந்த உலகையே மாற்றுவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

**–சுபம்–**